# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No.463/2024
## வழக்கு சாட்சி PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணாச்சலம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பசாமி | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 4th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி ரகு எனது பக்கத்து வீட்டுக்காரர். பட்டியல் சாட்சி 1 ராமகிருஷ்ணன் கேபிள் டீவி நடத்தி வருகிறார். நான் அவரிடம் வேலை செய்து வந்தேன். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 05.08.2013ம் தேதி, காலை 08.00 மணிக்கு நானும், அருணாச்சலம் மற்றும் இராமகிருஷ்ணன் ஆகியோர்கள் கேபிள் லைனை பார்வையிட்டு கொண்டிருந்தபோது கீழப்பாவூர் பிரேமலதா மருத்துவமனைக்கு வடபுறம் செல்லக்கூடிய இராமகிருஷ்ணனுக்கு சொந்தமான கேபிள் ஒயர்களை எதிரிகள் வெட்டி

சேதப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் இராமகிருஷ்ணனை பார்த்து அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 17:24:49 +0530